செ.வெ.எண்: 08 நாள்: 06.11.2020

## <u>2020-2021 ஆம் நிதியாண்டிற்கான தாட்கோ திறன் மேம்பாட்டு திட்டங்களில் பயிற்சி பெற விருப்பமுள்ள ஆதிதிராவிடர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.</u>

## இது குறித்து, கரூர், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்ட செய்திகுறிப்பு

தாட்கோ மூலமாக ஆதிதிராவிடர் மாணவ/ மாணவியர்க்கு குறுகிய கால (3 மாதம் முதல் 6 மாதம் வரையிலான) திறன் மேம்பாட்டு பயிற்சிகள் அவர்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்திக் கொள்ள கடட்டணமில்லாமல் அளிக்கப்படுகிறது.

இவ்வாண்டு கரூர் மாவட்டத்தில் 3 பயிற்சி நிறுவனங்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் நடத்திட பயிற்சி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் சில நிறுவனங்களுக்கும் பயிற்சி ஆணைகள் வழங்கப்படவுள்ளது. பயிற்சி வழங்கப்பட்ட விபரம் கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

தங்களது தகுதிக்கேற்ப ஆதிதிராவிடர் மாணவ/மாணவர்கள் பயிற்சி நிறுவனங்களை தொடர்பு கொண்டு தாங்கள் விரும்பும் பயிற்சியினை மேற்கொள்ள தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மூலமாக வழங்கப்படும். இத்திறன் மேம்பாட்டு பயிற்சி முற்றிலும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. மேலும் மாணவ/ மாணவியர்கள் பயிற்சி பெற சென்று வருவதற்கான பயணப்படி, போக்குவரத்து செலவு மற்றம் அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு உரிய சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**தையல் பயிற்சி:** ஸ்ரீதேனாஅறக்கட்டளை,எண்.11/23,தலைவர் ராமானுஜம் தெரு,கரூர் 639001,தொடர்புக்கு:9443-996434. 2. ஓவியாஸ் ஸ்கூல் ஆ∴ப் டிசைன ரூ∴பைன் ஆர்ட்ஸ், நெ:3,தெரசா நகர், அரசு கால்நடை மருத்துவமனை,கரூர் மற்றும் குளித்தலை. தொடர்புக்கு:98409-31831. 3. கூடு அறக்கட்டளை, 75/14,திருச்சி மெயின் ரோடு,மைலம்பட்டி, கடவூர். தொடர்புக்கு:98421-27886. மேற்கண்ட பயிற்சி நிறுவனங்களில் திறன் மேம்பாட்டு பயிற்சி முடித்து சான்று பெற்ற பயிற்சியாளர்கள் மாவட்ட மேலாளரிடம் தாங்கள் பெற்ற பயிற்சிக்கு ஏதுவாக தொழில் தொடங்கிட தொழில் முனைவோர் திட்டத்தின் கீழ் பயன்பெறலாம் என **கரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எஸ்.மலர்விழி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**